**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE FAST TRACK COURT, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC 87/2022 |
| Deposition of witness | | PW1/LW1 |
| Name | | செல்வி.பிரியங்கா |
| Father's/Husband Name | | கணேசன் |
| Village | | காயாவூர் |
| Taluk | | பட்டுக்கோட்டை |
| Caste | | - |
| Calling | | - |
| Religion | | - |
| Age | | 19/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 10th day May 2024
எதிரி ஆஜரில் உள்ளார்.
**(சாட்சியிடம் சத்தியப்பிரமானம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது**

**முதல்விசாரணை**

நான் தற்போது பட்டுக்கோட்டை தாலுக்கா காயவூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது திருவாரூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் லேப் டெக்னிசியன் படிப்பு படித்து வருகிறேன். எதிரிகளை தெரியும். எங்கள் வீட்டிற்கும் அருகில் வசிக்கும் முருகானந்தம் வீட்டிற்கும் நீண்ட காலம் இட தகராறு இருந்து வந்தது. நான் வீட்டில் குளிக்கும்போது எதிரி முருகானந்தம் பார்த்ததால் எனது அம்மா அவரை சத்தம்போட்டார்கள். இந்த நிலையில் 18.04.2021 அன்று காலை 09.00 மணியளவில் எங்கள் ஊர் பஞ்சாயத்து பிரசிடன்ட் எங்கள்

தெருவில் தண்ணீர் குழாய் பைப் போடுவதற்காக வந்திருந்தார். நாங்கள் எங்கள் வீட்டிற்கு அருகில் முள் வேளி போட்டிருந்தோம். பைப்போட வந்தவர்கள் அந்த முள் வேளியை எடுத்து போட்டு பைப் போட்டார்கள். அப்போது எதிரி போதுமணி முருகானந்தத்தின் வீட்டிலிருந்து வந்து பைப் போடாதிர்கள் என்று சொன்னார். நானும் எங்கள் அப்பா அம்மா வந்த பிறகு பைப் போடலாம் என்று சொன்னதால் அவர்கள் சென்றுவிட்டாகள். எங்கள் வீட்டிற்கும் எதிரி முருகானந்தம் வீட்டிற்கும் இடையில் முள் வேலி மட்டும்தான் இருந்தது. எங்கள் வீட்டு பாத்ரூம் திறந்தவெளியில்தான் இருக்கும். முருகானந்த வீட்டிலிருந்து பார்த்தால் எங்கள் வீடு பாத்ரூம் தெரியும். நான் கொஞ்ச நேரம் கழித்து என் வீட்டு பாத்ரூமிற்கு குளிக்க சென்றபோது எதிரி முருகானந்த அவரது செல்போனை எடுத்துக்கொண்டு அவர் வீட்டு பாத்ரூமிற்கு சென்றார். அவர் வீட்டு பாத்ரூமிலிருந்து நான் குளிப்பதை செல்போனில் வீடியோ எடுக்க வந்தார் அப்போது ஏன் இப்படி செய்கிறிர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் நான் அப்படிதான் செய்வேன் என்று சொல்லிவிட்டு எதிரிகள் அனைவரும் எங்கள் வீட்டிற்கு வந்து எதிரி போதுமணி என்னை தேவடியா என்று திட்டி என் தம்பி அப்படிதான் செய்வான் என்று சொல்லிவிட்டு விலக்கமாத்தால் என்னை தலையில் அடித்தார். எதிரி கீர்த்தனா அவரது கையால் என் இடது கையில் அடித்துவிட்டு போதுமணியின் கணவர் வரட்டும் உன்னுடன் படுக்க சொல்கிறேன் என்று அசிங்கமாக பேசினார். எதிரி சின்னமனி அவர் போட்டிருந்த செருப்பை கழட்டி என் மீது விசினார். எதிரி முருகானந்தம் என் வயிற்றில் எட்டி உதைத்தார். இதனால் பொதுவெளியில் எனக்கு அவமானமாக நடந்துவிட்டதால் வீட்டில் இருந்த பூச்சி மருந்தை குடித்துவிட்டேன். அதன்பிறகு எனது அம்மா, எனது மாமா மகன் சிவா,

அய்யப்பன் ஆகியோர் என்னை பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்த்தார்கள். நான் மருத்துவமனையில் இருந்தபோது போலிசார் வந்து என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சாஆ-1** ஆகும். சம்பவ தினமான 18.04.2021 அன்று பட்டுக்கோட்டை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 11-ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தேன். அப்போது எனக்கு 16 வயது நடந்துக்கொண்டிருந்தது. எனது பிறந்த தேதி 06.12.2004 ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(அரசு தரப்பு வழக்கறிஞர் சம்பவத்தன்று சாட்சிக்கு 16 வயது என்பதால் சம்பவ குற்றமானது இளவருக்கு இழைக்கப்பட்ட குற்றம் என்பதாலும் இந்த வழக்கு அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கப்படவேண்டிய POCSO வழக்கு என்று தெரிவிக்கப்பட்டதால் மேல் நடவடிக்கைக்காக வழக்கு நிறுத்திவைக்கப்படுகிறது)

Signature of witness

*Taken down by the typist under my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
*by him to be Correct.*

Judicial Magistrate,

Fast Track Court (Magisterial Level)
Pattukkottai.